**கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம் - 2013**

கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 செப்தெம்பர் 03 ஆந் திகதிய எஸ்எல்-பீ 90 ஆம் இலக்க துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் IV ஆவது உறுப்புரையின் 4.03(ஏ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டமானது தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே கைசாத்திட்ட 2007 மார்ச் 28 ஆந்திகதிய எஸ்எல்-பீ 90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின்படி அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் மற்றும் நிறைவேற்றல் முகவராக உள்ளது. புதிய அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதன் மூலம் கொழும்பு நகரம் மற்றும் கொட்டியாவத்தை - முல்லேரியாப் பகுதியின் நீர் வழங்கலை புனரமைத்து தரமுயர்த்தல் மற்றும் மாளிகாகந்தையில் புதிய நீர்த்தேக்கம், எலி ஹவுஸ்சில் நீர் தேக்கம் நிர்மாணித்து கொட்டியாவத்தை மற்றும் முல்லேரியாவில் நீர் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல் மற்றும் கொழும்பு நகரத்தில் தெரிவு செய்யப்பட்ட தோட்டங்களில் வாடகை நீர் இணைப்பை வழங்கல் என்பனவே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,785 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 5,359 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,549 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 3,975 மில்லியன் அல்லது 74.18 சதவீதம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 1,236 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 1,384 மில்லியன் அல்லது 25.82 சதவீதம் செயற்திட்டத்தினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக இலங்கை அரசாங்கம் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2007 நவம்பர் 27 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் பின்னர் செயற்திட்ட காலம் 2015 செப்தெம்பர் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக்

கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புகள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-------------------------

### 2.1. அபிப்பிராயம்

-------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------

#### 2.2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 04 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) துணைநிலைக் கடன்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பொதுத் திறைசேரியால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 172.64 மில்லியன் தொகையான வட்டி சிவில் நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செலுத்தப்பட்ட ரூபா 370.47 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக அரசாங்க பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

-------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான கணிப்பீட்டுச் சபை அளவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், பேணப்பட

வேண்டுமென வேண்டப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேல் சேவையாற்றிய காலத்திற்காக செயற்திட்டத்தின் 02 உத்தியோகத்தர்களிற்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண் டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | | நிதிகளின் பயன்பாடு 2013 ஆம் ஆண்டின் போது | | நிதிகளின் பயன்பாடு 2013 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஜ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஜ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஜ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஜேஐசீஏ | 3,975 | 3,549 | 381.68 | 500 | 372.24 | 488.22 | 2,325.98 | 3,168.52 |
| இலங்கை அரசாங்கம் | 1,384 | 1,236 | 106.87 | 140 | 77.86 | 102.00 | 659.24 | 896.57 |
| **மொத்தம்** | **5,359** | **4,785** | **488.55** | **640** | **450.10** | **590.22** | **2,985.22** | **4,065.09** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாலிகாகந்த அலுவலக கட்டிட நிர்மாணம், கேத்தட்டுவ –முல்லேரியா-கொட்டிகாவத்த பகுதியின் தண்ணீர் விநியோக வலையமைப்பின் வழங்கல் மற்றும் குழாயிடல் மற்றும் எலிய கவுஸ் நீர்த்தேக்க மீள்நிர்மாணம் என்பவற்றின் பௌதீக முன்னேற்றம் 90 சதவீதம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் 2014 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட ஏனைய நடவடிக்கைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதிப் புனரமைப்பிற்கான வேலைகள், வாகனத் தரிப்பிடப் பகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள், நில மட்டப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் அணைக்கட்டு சுவர்களை அமைத்தல் மற்றும் சம்பத்தப்பட்டவற்றின் வேலையமைத்தல் போன்ற வேலைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு பொருத்தமான காணிகளை விடுவிப்பதற்கு கொழும்பு மாநகர சபையின் தாமதம் காரணமாக பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான காணியின் தெளிவுபடுத்தல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு பரிசோதனை திகதி வரையும் மாலிகாகந்த வால் கவுசின் நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை என்று 2015 ஆகஸ்ட் 14 இல் செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ரூபா 275,091,484 கிரயத்தில் 2014 ஆண்டின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டடிருந்த மாலிகாகந்தையிலுள்ள நீர்த்தேக்க குளம் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(இ) பௌதீக இலக்குகளை மேவி செயற்திட்டத்தால் விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வேலைகளின் திசைதிருப்பல் மற்றும் தேவப்பட்ட உடனடி அளவீடுகள் என்பவற்றின் இனங்காணலிற்காக

பொறிமுறையெதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை. ஆகவே, செல்நடவடிக்கை திட்டமானது செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் 2013 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 73.37 மில்லியனாகும்.

**3.4 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்**

---

நிதிப்பிரமாணம் 154(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.